வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 29.05.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>*தலைப்புச் செய்திகள்*</u>

- குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், 3 நாள் பயணமாக கர்நாடகா, கோவா மற்றும் கேரளத்திற்குச் செல்கிறார்.
- தேர்வு மாஃபியாக்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் உறுதியாக தெரிவித்துள்ளார்.
- வழக்கு விசாரணை முடிந்து, தீர்ப்புகளை ஒத்தி வைத்த 3 மாதங்களுக்குள், தீர்ப்பு வழங்க வேண்டும் என்று, உயர்நீதிமன்றங்களுக்கு, உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- புதுச்சேரிக்கு தேவையான காவிரி நீரை, தமிழக மற்றும் கர்நாடக அரசுகளிடம் கேட்டுப் பெறுவோம் என்று முதலமைச்சர் திரு. ரங்கசாமி, தெரிவித்துள்ளார்.

<u>*சி.பி இராதாகிருஷ்ணன் (13)*</u>

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், கர்நாடகா. கோவா மற்றும் கேரளத்திற்கு, 3 நாள் பயணமாக செல்கிறார். இன்று கர்நாடகா செல்லும் அவர், அங்கு, தனியார் அறக்கட்டளையின் 45ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்கிறார். அதனைத் தொடர்ந்து, தாவணகெரோயில் உள்ள BDT பொறியியல் கல்லூரியின் பிளாட்டின விழாவிலும் கலந்து கொள்கிறார். நாளை, கோவா மாநிலம் செல்லும் குடியரசு துணைத் தலைவர், அங்கு, அம்மாநில தின கொண்டாட்டங்களில் பங்கேற்கிறார். மேலும், கோவாவில் உள்ள CSIR தேசிய கடலியல் நிறுவனத்திற்கும் அவர் செல்கிறார். பின்னர், வரும் ஞாயிற்றுக்கிழமை,

கோவாவின், பெல்தங்கடியில் அமைக்கப்பட்டுள்ள SIRI தொழிற்பூங்காவை அவர் திறந்து வைக்கிறார். அதனைத் தொடர்ந்து, கேரளத்திற்கு பயணம் மேற்கொள்ளும் அவர், கோட்டயத்தில், தீபிகா மலையாள நாளிதழின் 140ஆவது, நிறுவன ஆண்டு விழாவை தொடக்கி வைக்க உள்ளார்.

***<u>அமித் □ ா (16)</u>***

சட்டவிரோத குடியேற்றம் மற்றும் இயல்புக்கு மாறான காரணங்களால் ஏற்படும் செயற்கையான மக்கள் தொகை மாற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழு, இப்பிரச்சனையை சமாளிக்க சட்டம் தேவையா என்பது குறித்து, மதிப்பீடு செய்யும் என்று, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மக்கள் தொகையில் ஏற்படும் போலியான மாற்றத்தை சட்டரீதியாக கட்டுப்படுத்துவது குறித்தும், இக்குழு ஆய்வு செய்யும் என்று தெரிவித்தார். மேற்கு வங்க மாநிலத்தில், ஆட்சியில் இருந்த, செல்வி மம்தா பானர்ஜி தலைமையிலான அரசு, வங்க தேசத்தில் இருந்து, எல்லைத் தாண்டும் ஊடுருவல்காரர்களை தடுக்க எந்தவித முயற்சியையும் எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டினார். தேர்தலுக்குப் பிறகு, அம்மாநிலத்தில் புதிய முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு. சுவேந்து அதிகாரி, ஊடுருவலைத் தடுப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தார். மேலும், வங்க தேசத்தையொட்டி, ஊடுருவல் ஏற்படாமல் தடுக்கும் வகையில், வேலி அமைக்கப்படும் என்றும் திரு. அமித் ஷா தெரிவித்தார்.

*தர்மேந்திர பிரதான் -1 (5)*

தேர்வு மாஃபியாக்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் உறுதியாக தெரிவித்துள்ளார். DD செய்திப் பிரிவுக்கு அவர் அளித்த பிரத்யேக பேட்டியில், மறுதேர்வு செயல்முறை எந்த பிழையும் இன்றி, முறையாகவும், திட்டமிட்ட விதத்திலும் நடத்தப்படும் என்று தெரிவித்தார்.

*தர்மேந்திர பிரதான் -2 (14)*

(வாய்ஸ்)

கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் மேலும், கூறுகையில், மாணவர்களின் கவலையை அரசு புரிந்து கொண்டிருப்பதாகவும், தகுதியான மாணவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார். தகுதியான ஒரு மாணவனின் எதிர்காலம் கூட தேர்வு மாஃபியாக்களின் கைகளில் சிக்கிவிடவோ அல்லது முறைகேடுகளுக்கு பலியாகி விடவோ, கூடாது என்பதற்காகவே அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

தேர்வு செயல்முறைகள் குறித்த கவலைகள் அதிகரித்து வரும் நிலையில், பிழையற்ற முறையில், தேர்வை நடத்துவற்கு சாத்தியமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருதாகவும் அமைச்சர் தெரிவித்தார். தேர்வு முறைகேடு தொடர்பான, மத்திய புலனாய்வுத் துறையின் விசாரணை சரியான திசையில் சென்று கொண்டிருப்பதாகவும், இதில் சம்பந்தப் பட்டவர்களுக்கு தண்டனை கிடைப்பதை அரசு உறுதி செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

*தர்மேந்திர பிரதான் -3 (9)*

CBSE மறு மதிப்பீட்டு இணையதளத்தில், அண்மையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறுகள் குறித்து பேசிய திரு. தர்மேந்திர பிரதான், மாணவர்களுக்கான வெளிப்படையான மற்றும் பிழையற்ற டிஜிட்டல் மதிப்பீட்டு செயல்முறையை உறுதி செய்வதோடு. அனைத்து தொழில்நுட்ப சிக்கல்களையும் தீர்க்க CBSE தீவிரமாக செயல்பட்டு வருவதாகவும் கூறினார்.

மறு மதிப்பீட்டு விண்ணப்பங்களுக்கான கட்டணம் செலுத்துவதற்கு ஒரே ஒரு வங்கியை சார்ந்து இருப்பதற்குப் பதிலாக, ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, இந்தியன் வங்கி, பேங்க் ஆஃப் பரோடா, மற்றும் கனரா வங்கி ஆகிய 4 பொதுத்துறை வங்கிகளை இந்த சேவையில் ஈடுபடுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார்.

*உச்சநீதிமன்றம் (17)*

வழக்கு விசாரணை முடிந்து, தீர்ப்புகளை ஒத்தி வைத்த 3 மாதங்களுக்குள், தீர்ப்பு வழங்க வேண்டும் என்று, நாடு முழுவதும் உள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களுக்கும், உச்சநீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பான உத்தரவு பிறப்பித்த தலைமை நீதிபதி திரு. சூரியகாந்த் தலைமையிலான அமர்வு, தீர்ப்புகளை வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள், வழக்காடுபவர்களுக்கு ஈடு செய்ய முடியாத பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் தெரிவித்த து. தனிநபர் சுதந்திரம் தொடர்பான வழக்குகளில், விரைவாக தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய இந்த அமர்வு, ஜாமீன் மனுக்கள் மீதான உத்தரவுகள், அதே நாளில் வழங்கப்பட வேண்டும் என்றும், அவை ஒத்திவைக்கப்பட்டால் அடுத்த நாள் வழங்கப்பட்டு, பதிவேற்றப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, பல வழிகாட்டுதல்களை வழங்கி உள்ள உச்சநீதிமன்றம், ஜாமீன் அல்லது தண்டனை நிறுத்தி வைப்பு உத்தரவுகள் வழங்கப்பட்ட

உடன் சிறை அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்றும், விசாரணை கைதி, முன்னுரிமையாக அதே நாளில் அல்லது அதிகபட்சமாக அடுத்த நாளில் விடுவிக்கப்பட வேண்டும் என்றும், தெரிவித்துள்ளது.

***ரங்கசாமி -1 (3)***

புதுச்சேரிக்கு தேவையான காவிரி நீரை, தமிழக மற்றும் கர்நாடக அரசுகளிடம் கேட்டுப் பெறுவோம் என்று புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, தெரிவித்துள்ளார்.

***ரங்கசாமி - 2 (11)***

(வாய்ஸ்)

அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு. மல்லாடி கிருஷ்ணராவ், இன்று, சட்டப்பேரவை வளாகத்தில் உள்ள அவரது அறையில் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. முதலமைச்சர் திரு. ரங்கசாமி, திரு. மல்லாடி கிருஷ்ணராவை அவரது இருக்கையில் அமர வைத்து, சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் பேசிய முதமைச்சர் அதிக வெப்பம் காரணமாக, புதுச்சேரியில் இயங்கும் அனைத்து பள்ளிகளும், அடுத்த மாதம் 4ஆம் தேதி திறக்கப்படும் என்று தெரிவித்தார். மாநில அந்தஸ்து பெற, மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம் என்று கூறிய அவர், புதுச்சேரிக்கு கிடைக்க வேண்டிய காவிரி நீரை, தமிழக மற்றும் கர்நாடக அரசுகளை கேட்டுப் பெறுவோம் என்று கூறினார்.

*__மாஹே அலுவலகம் (11)__*

மாஹே சட்டமன்றத் தொகுதி உறுப்பினர், வழக்கறிஞர் திரு. அசோக் குமாரின் அலுவலகத்தை, முன்னாள் மாஹே சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ராமச்சந்திரன் இன்று திறந்து வைத்தார். அப்போது பேசிய அவர், மாஹே ஒரு சிறிய பிராந்தியமாக இருந்தாலும், பல்வேறு பொதுவான பிரச்சனைகளை எதிர்கொண்டு வருவதாகவும் கூறினார். மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறிந்து, தீர்வு காணும் ஒரு தளமாக இந்த சட்டமன்ற அலுவலகம் செயல்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார். சட்டமன்ற அலுவலக திறப்பு விழாவில், உள்ளூர் குழு உறுப்பினர் திரு. நவ்ஷாத், தலச்சேரி பகுதி குழு உறுப்பினர் திரு. வடக்கன் ஜனார்த்தனன், மற்றும் பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டதாக, எமது மாஹே நிருபர் தெரிவிக்கிறார்.

*__முன்னாள் ராணுவ வீரர்கள் (19)__*

மறு வேலைவாய்ப்பு பெற்றிடாத மற்றும் வருமான வரி செலுத்துவோர் பட்டியலில் இடம் பெறாத, முன்னாள் ராணுவ வீர ர்கள் மற்றும் முன்னாள் ராணுவ வீரர்களின் விதவைகள், தங்கள் குழந்தைகளின் பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பிற்கான உதவித் தொகையை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் என்று, புதுச்சேரியில் உள்ள முப்படை நலத்துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், 2025-26ஆம் கல்வி ஆண்டிற்கான உதவித் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள், புதுச்சேரி முப்படை நலத்துறையில், அடுத்த மாதம் 5ஆம் தேதி முதல் 25ஆம் தேதி வரை, அலுவலக நாட்களில், வழங்கப்படும் என தெரிவித்துள்ளது. காரைக்கால் பகுதியைச் சேர்ந்த முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் முன்னாள் ராணுவ வீரர்களின் விதவைகள், அம்மாநில மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும், மாஹே மற்றும் ஏனாம் பகுதியைச் சேர்ந்தவர்கள்,

அந்தந்த மண்டல நிர்வாக அலுவலகத்தில், விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது. மேலும், Sainik.py.gov.in இணையதளம் மூலமாகவும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அசல் பள்ளிக் கட்டண ரசீதுகளுடன் வரும் ஜூலை மாதம் 20ஆம் தேதிக்குள், முப்படை நலத்துறையில் சமர்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*__எண்ணெய் கப்பல் (7)__*

இம்மாதம் 21ஆம் தேதி, ஷார்ஜாவில் இருந்து புறப்பட்ட இந்தியாவுக்கான எண்ணெய் கப்பல், ஹார்மூஸ் ஜலசந்தியை வெற்றிகரமாக கடந்துள்ளது. இக்கப்பல், வரும் 3ஆம் தேதி விசாகப்பட்டினத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இது தொடர்பாக, ஈரான் நாட்டின் செய்தி முகமை வெளியிட்டுள்ள தகவலில், இஸ்லாமிய புரட்சிப்படையின் கடற்படைப்பிரிவினர், நேற்று மட்டும், 23 வர்த்தக கப்பல்கள் ஹார்மூஸ் ஜலசந்தியை பாதுகாப்பாக கடக்க உதவி புரிந்ததாக தெரிவித்துள்ளது.

*__எபோலா (9)__*

ஆப்பிரிக்க குடியரசு நாடான காங்கோவில் பரவி உள்ள எபோலா வைரஸ் தொற்று, அந்நாட்டிற்கு ஒரு சிக்கலான சூழ்நிலையை உருவாக்கி இருப்பதாக, உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் திரு. டெட்ரோஸ் அதானம் தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்கிடம் பேசிய அவர், காங்கோவின், Buniya விலும், நிலமையின் தீவிரத்தை கருத்தில் கொண்டு சுகாதார குழுக்கள் அனுப்பப் பட்டுள்ளதாக தெரிவித்தார். முதற்கட்ட தகவலின் படி ஆயிரத்திற்கும் மேற்பட்டோர், அந்நாட்டில் எபோலா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், இதுவரை, 238 பேர் உயிரிழந்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

தென்மேற்கு பருவமழை (17)

ஜுன் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான தென்மேற்கு பருவமழை காலத்தில், நாடு முழுவதும் மழை பொழிவு இயல்பை விட குறைவாகவே இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வுத்துறை கணித்துள்ளது. புதுடெல்லியில், இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய புவி – அறிவியல் அமைச்சகத்தின் செயலர் டாக்டர் ரவிசந்திரன், இந்த ஆண்டு, தென்மேற்கு பருவமழை காலத்தில் பெய்யும் மழையின் சராசரி அளவு, 90 சதவிகிதமாக இருக்கும் வாய்ப்பு உள்ளது என்றார். இதில் 4 சதவிகித அளவிற்கு ஏற்ற – இறக்கம் இருக்கலாம் என்றும் கூறினார். அவரைத் தொடர்ந்து, செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைமை இயக்குநர் டாக்டர் மிருத்யுஞ்ஜய் மஹாபத்ரா, ஜுன் மாதத்தில், தென்மேற்கு பருவ மழை இயல்பை விட குறைவாகவே இருக்கும் என்றும், வடமேற்கு, வடகிழக்கு மற்றும் தென்னிந்திய தீபகற்பம் உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளில், இயல்பான அல்லது இயல்பைவிட அதிகமான மழை பொழிவு இருக்கலாம் என்றும் கூறினார்.

ஜுன் மாதத்தில், உத்தரப்பிரதேசம், ஹரியானா, பஞ்சாப், பீஹார், ஒடிஷா, சத்தீஸ்கர் மற்றும் குஜராத்தின் பல பகுதிகளில், இயல்பை விட அதிபட்ச வெப்பநிலை நிலவக்கூடும் என்றும் டாக்டர் மிருத்யுஞ்ஜய் மஹாபத்ரா தெரிவித்தார்.

கிரிக்கெட் (6)

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், இன்று இரவு 7.30 மணிக்கு, புதிய சண்டிகரில் உள்ள மஹாராஜா யாதவிந்திரா சிங் சர்வதேச மைதானத்தில் நடைபெறும் தகுதிச் சுற்று 2-இல், குஜராத் டைட்டன்ஸ் அணியும் – ராஜஸ்தான் ராயல்ஸ் அணியும் விளையாடுகின்றன. இதில் வெற்றி பெறும் அணி, நாளை மறுநாள் அஹமதாபாத் நரேந்திர மோடி மைதானத்தில் நடைபெறும், ஐபிஎல் இறுதிப்போட்டியில், பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணியை எதிர்கொள்ளும்.

***வானிலை (5)***

தென்மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனையொட்டிய தமிழக பகுதிகளின்மேல் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக, அடுத்த 3 நாட்களுக்கு, தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும், இடி-மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.